Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 21-04-2026
Deposition of witness for : PW 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டைசன் | வயது | : | 22 |
| தந்தை பெயர் | : | சுரேஸ் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பாத்திமா நகர், தஞ்சாவூர் | தொழில் | : | டைல்ஸ் வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 produced through V.C. and other accused present**

**Ld. D. Counsel Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். டைல்ஸ் வேலை செய்து வருகிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் 12 வது எதிரி நிமோசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. முதல் கையெழுத்து கோவிந்தன் என்பவனுடையது. அவன் என் நண்பர்.

3) 18.09.2025 அன்று மாலை 4 மணியளவில் பாத்திமா நகரில் இருந்து விளார் பைபாஸ் ரோட்டிற்கு நானும் கோவிந்தனும் சென்றுக்கொண்டிருக்கும்போது போலீசார் ஒரு நபரை விசாரித்துகொண்டிருந்தார்கள். நாங்கள் போய் பார்த்தபோது அவர் பெயர் நிமோசன் என்றும் அன்றைய தேதியில் இருந்து சுமார் 10 நாட்களுக்கு முன்பு கலைஞர் நகர் 1வது தெருவில் நடந்த  சசிக்குமார் என்பவர் கொலை சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தார். அப்போது அண்ணை வேளாங்கன்னி கல்லூரியை சார்ந்த ராஜா என்கிற சஞ்சையை பார்க்கபோவதாகவும் ராஜா போனை நிமோசன் வைத்திருந்ததாகவும் அந்த போனை குடமுருட்டி ஆற்றில் வீசிவிட்டதாகவும் நிமோசன் போலீசாரிடம் சொன்னார்.

4) கலைஞர் நகர் 1வது தெருவில் உள்ள சபரியை பார்க்கவரும்போது போலீசாரிடம் மாட்டி கொண்டதாக கூறினார்.

5) எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்கவேண்டும் என்று போலீசார் கேட்டார்கள். நாங்கள் ஒத்துக்கொண்டு சாட்சியாக இருந்து கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும்  நிமோசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அந்த இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.6** ஆகும்.

6) போலீசார் இது பற்றி என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் இளம் வழக்கறிஞர்கள் ஆஜர் ஆனார்கள்.  குறுக்கு விசாரணை செய்ய

வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதும் இல்லை என முடிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.21 15:00:19 +0530